# வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்

**2022 இறுதி ஆண்டு மதிப்பீடு**

ஜூலை 2023

© Verité Research

# உள்ளடக்க அட்டவணை


வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால் ........ 3

இது எப்படி செயல்படுகிறது? ........ 3

வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் ........ 4

முன்னேற்றக் கண்காணிப்பான் ........ 5

முன்னனற்றம், திறந்த நிணல மற்றும் தரவரிணெ மதிப்பீடுகளின் விவரங்கள் ........ 7

பொறுப்புத்துறத்தல் ........ 47

## *வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்*

**“வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்”** என்பது publicfinance.lk தளத்தின் கீழுள்ள ஒரு டாஷ்போர்டு ஆகும். இது வருடாந்த வரவு செலவுத்திட்ட உரையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கத்தின் செயல்திறனைக் கண்காணிக்கிறது.

2017 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த டாஷ்போர்டு, அரசாங்கம் வருடாந்த வரவு செலவுத்திட்ட உரையில் முன்வைக்கும் வாக்குறுதிகள் குறித்த இரண்டு அடிப்படைக் கேள்விகளுக்குப் பதிலளிக்க முனைகிறது:

- அரசாங்கம் சொல்வதைச் செய்கிறதா?
- அரசாங்கம் செய்வதைச் சொல்கிறதா?

இந்தக் கேள்விகளுக்கான பதில்களைப் பகிரங்கமாக வழங்குவதன் மூலம் டாஷ்போர்டு கீழுள்ளவற்றை அடைய முயல்கிறது.

(i) அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகளின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல்

(ii) இவ்வாக்குறுதிகளுக்கு அரசாங்கத்தைப் பொறுப்பாக்குதல்

## *இது எப்படி செயல்படுகிறது?*

இந்த மதிப்பீடு 2022 இடைக்கால வரவுசெலவுத் திட்ட உரையில் வெளிப்படையாக முன்மொழியப்பட்ட 24 செலவின முன்மொழிவுகளையும் 5 ஒழுங்குமுறை முன்மொழிவுகளையும் கண்காணித்தது. செலவின முன்மொழிவுககள் செலவின ஒதுக்கீடுகள் மற்றும் அதன் அளவிடக்கூடிய விளைவுகளைக் கொண்டிருக்கும் அதேவேளை, கொள்கை திட்டங்கள் சட்டமியற்றும் சட்டங்கள் அல்லது நடைமுறைக்கு வர வேண்டிய ஒழுங்குமுறை அறிவிப்புக்களை (வர்த்தமானிகள்) கொண்டிருக்கின்றன.

முன்மொழிவுகள் இரண்டு குறிகாட்டிகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகின்றன: வெளிப்படைத்தன்மை மற்றும் முன்னேற்றம்.

ஆராய்ச்சிக் குழு, தொடர்புடைய தகவல்களை ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்துவதைக் கண்காணித்தாலும், அது முதன்மையாக 2016 இன் தகவல் அறியும் உரிமைச் சட்டம் இலக்கம் 12 மூலம் செயல்படுத்தும் நிறுவனங்களுக்குத் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமை (RTI)

கோரிக்கைகளையே சார்ந்திருந்தது. கோரிக்கைகள் 2023 ஜனவரி 31 மற்றும் பிப்ரவரி 1 ஆம் திகதிகளில் தாக்கல் செய்யப்பட்டன. நாட்டில் நிகழ்ந்த நெருக்கடி சூழ்நிலைகள் காரணமாக, 20 வேலை நாட்களை உள்ளடக்கி, 28 பெப்ரவரி 2023 வரை, மதிப்பீட்டிற்கான தகவல்கள் முகவர்களிடம் இருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்தக் காலகட்டத்திற்கு அப்பால் பெறப்பட்ட எந்த தகவலும் மதிப்பீட்டிற்காக கருதப்படவில்லை.

*வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்*

இச்சுட்டியானது அரசாங்கம் தான் செய்வது பற்றி எந்தளவு வெளிப்படுத்துகிறது என்பதை கண்காணிக்கிறது. இது ஒவ்வொரு அமைச்சரவை தீர்மானங்கள்/வாக்குறுதிகளை செயல்படுத்தப்படுவது தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்படும் அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையின் நிலையை அளவிடுகிறது. சுருக்கமாக, இந்தச்சுட்டி வெளிப்படைத்தன்மையை கண்காணிக்கிறது.

வெளிப்படைத்தன்மை என்பது மதிப்பீட்டு காலகட்டத்தின்போது கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் அமைந்துள்ளதோடு பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது:

| | |
|---|---|
| **வெளிப்படையற்றது** | எவ்வித தகவலும் இல்லை. |
| **மட்டுப்படுத்தப்பட்டது** | எவ்வித முன்னேற்றத்தையும் தீர்மானிக்க போதுமான தகவல் இல்லை. |
| **ஒத்துழைக்கப்படாதது** | தகவல்களைப் பெறுவதற்கும் மதிப்பிடுவதற்கும் கடும் முயற்சி தேவைப்பட்டது. |
| **ஒத்துழைக்கப்பட்டது** | தகவல்கள் காலதாமதமின்றி வழங்கப்பட்டன. |
| **வெளிப்படையானது** | முழுத் தகவல்களும் கேற்பதற்கு முன்னரே வெளிப்படுத்தப்பட்டிருந்தன. |

இந்தச் சுட்டியானது அரசாங்கம் தாம் செய்வதாக சொல்வதை எந்தளவுக்கு செய்கிறது என்பதை கண்காணிக்கிறது. அமைச்சரவை தீர்மானங்கள்/வாக்குறுதிகளை பொறுப்பான நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட காலக்கெடு மற்றும் மெயில் கற்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்தின் முன்னேற்ற நிலையை மதிப்பிடுகிறது.

ஆண்டிறுதி மதிப்பீட்டின் முன்னனற்றம் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது:

| | |
|---|---|
| **தகவல் வெளிப்படுத்தப்படவில்லை** | அமைச்சரவை தீர்மானம்/வாக்குறுதியின் நிலையை தீர்மானிக்கத் தகவல் கிடைக்கவில்லை அல்லது கிடைத்த தகவல் போதுமானதாகவோ, பயனுள்ளதாகவோ இல்லை. |
| **கைவிடப்பட்டுள்ளது** | அமைச்சரவை தீர்மானம்/வாக்குறுதியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை அல்லது அமைச்சரவை தீர்மானம்/வாக்குறுதி செயல்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளது. |
| **முன்னனற்றமற்றது** | அமைச்சரவை தீர்மானம்/வாக்குறுதியின் முன்னேற்றம் அதன் இலக்கில் 33%க்கும் குறைவாக எட்டப்பட்டுள்ளது. |
| **பகுதியளவு நிறைவேறியது** | அமைச்சரவை தீர்மானம்/வாக்குறுதியின் முன்னேற்றம் அதன் இலக்கில் 33%க்கும் 66%க்கும் இடையில் எட்டப்பட்டுள்ளது. |
| **கணிசமான அளவு நிறைவேறியது** | அமைச்சரவை தீர்மானம்/வாக்குறுதியின் முன்னேற்றம் அதன் இலக்கில் 66%க்கும் 80%க்கும் இடையில் எட்டப்பட்டுள்ளது. |
| **முற்றாக நிறைவேறியது** | அமைச்சரவை தீர்மானம்/வாக்குறுதியின் முன்னேற்றம் அதன் இலக்கில் 80%க்கும் அதிகமாக எட்டப்பட்டுள்ளது. |

கொள்கைத் திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| **வெளிப்படுத்தப்படவில்லை** | அமைச்சரவை தீர்மானம்/ முன்மொழிவின் நிலையை தீர்மானிக்கத் தகவல்கள் கிடைக்கவில்லை அல்லது கிடைத்த தகவல் போதுமானதாகவோ, பயனுள்ளதாகவோ இல்லை. |
| **நிறைவேற்றப்படவில்லை** | அமைச்சரவை தீர்மானம்/முன்மொழிவின் எந்தவொரு பகுதிக்கும் தேவைப்படுகின்ற சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்படவில்லை. இதை சம்பந்தப்பட்ட அமைச்சு/அரச நிறுவனம் எழுத்து மூலம் உறுதிப்படுத்தியுள்ளது. |
| **பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது** | அமைச்சரவை தீர்மானம்/முன்மொழிவின் முழுமைக்கு அன்றி ஒரு சில பகுதிகளுக்கு மட்டும் தேவைப்படுகின்ற சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளது. |
| **நிறைவேற்றப்பட்டுள்ளது** | அமைச்சரவை தீர்மானம்/முன்மொழிவு முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அமைச்சரவை த் தீர்மானம்/முன்மொழிவின் முழுமைக்கு தேவைப்படும் சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளதுடன் மேலதிக எந்த நடவடிக்கையும் தேவையில்லை. |

## முன்னனற்றம், திறந்த நிணல மற்றும் தரவரிணெ மதிப்பீடுகளின் விவரங்கள்

| வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பெயர் | வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் சுருக்கம் | வெளிப்படைத்தன்மையின் வகை | முன்னேற்றத்தின் வகை | அரச நிறுவனம் |
|---|---|---|---|---|
| அரச தனியார் பங்காண்மை தேசிய நிறுவனத்தினை (NAPPP) தாபித்தல். | அரசாங்க மற்றும் தனியார் துறை பங்குபற்றுநர்களினால் மேற்கொள்ளக்கூடிய முதலீட்டு வாய்ப்புக்களை இனங்காணுதல் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்கான வசதிகளை வழங்குவதற்காக அரசாங்க மற்றும் தனியார் பங்குபற்றுகையுடன் கூடிய தேசிய நிறுவனம் (National Agency for Public Private Partnership-NAPP) ஒன்று தாபிக்கப்படும். இம் முன்மொழிவினை செயற்பதுத்துவதற்காக ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. | **வெளிப்படையானது**<br>மட்டுப்படுத்தப்பட்ட தகவல்கள் ஆன்லைனில் வெளியிடப்பட்டுள்ளன - பொது - தனியார் கூட்டுப் பங்காண்மை தேசிய முகவரகத்தை ஸ்தாபிப்பதற்கு ஒப்புதல் அளிக்கும் அமைச்சரவைத் தீர்மானம், எனினும் மேலதிக தகவல்கள் இல்லை. பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. பெப்ரவரி 28, 2023 திகதியிடப்பட்ட பதில் கடிதம் நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் இருந்து கிடைக்கப்பெற்றது. எனவே இது தாமதமாகக் கிடைக்கப்பெற்ற பதில் என வகைப்படுத்தப்பட்டது. பௌதீக மற்றும் நிதி தொடர்பான முன்னேற்றம் வழங்கப்பட்டிருந்தன. முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு வழங்கப்பட்ட தகவல்கள் | **நிறைவேற்றப்பட்டது**<br>செப்டெம்பர் 5, 2022 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தில் பொது-தனியார் கூட்டுப்பங்காண்மை தேசிய முகவரகத்தை உருவாக்க ஒப்புதல் வழங்கப்பட்டது.<br>நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல் கோரிக்கைக்கான பதிலின் பிரகாரம், செயல்திட்டம் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் பௌதீக மற்றும் நிதி தொடர்பான முன்னேற்றங்கள் கிடைக்கப்பெற்றன. அவை பின்வருமாறு:<br>ஓய்வுபெற்ற சிரேஷ்ட வங்கியாளரும் நிறுவனப் பணிப்பாளருமான ஆனந்த டபிள்யூ. அத்துக்கோரள NAPPP தலைவராக 14-09-2022 அன்று நியமிக்கப்பட்டார். அமைச்சரவை தீர்மானங்களின் அடிப்படையில் அத்துக்கோரள அவர்களுக்கு சம்பளம் வழங்க முன்வந்தாலும் அவர் அதை நிராகரித்து தற்போது சம்பளம் பெறாமல் தன்னார்வ அடிப்படையில் பணியாற்றி வருகிறார். NAPPPயை உருவாக்குவதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் பலதரப்பு முகவரகங்களின் (ADB, IFC மற்றும் WB) அனுபவம் மற்றும் உதவியை எதிர்பார்த்து பல சுற்று கலந்துரையாடல்களை NAPPP தலைவர் முன்னெடுத்துள்ளார்.<br>பொது - தனியார் பங்காண்மை தொடர்பான நடவடிக்கைகளில் NAPPP மற்றும் SOE மறுசீரமைப்பு அலகு ஆகியன ஒன்றுடன் ஒன்று இணைந்து பணியாற்ற வேண்டியிருப்பதால் செயல் திட்டங்களில் முன்னேற்றம் காண்பதற்காக குறிப்பிட்ட கருத்திட்டங்களை அடையாளம் காணும் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அதேவேளை, அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதி செயலகத்திடம் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகளில் NAPPP கவனம் செலுத்தி வருகிறது.<br>தாமரைக் கோபுரம் கட்டடத்தில் ஒதுக்கப்பட்டுள்ள அலுவலகத்தைப் புதுப்பிக்க 2022ம் ஆண்டில் சுமார் ரூ. 2.2 மில்லியன் | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் இருந்தன. | பயன்படுத்தப்பட்டுள்ளது.<br>பொது - தனியார் பங்காண்மைகள் தொடர்பான விடயங்களில் அமைச்சரவை அலுவலகம் மற்றும் ஜனாதிபதி செயலகம் ஊடாகக் கிடைக்கப்பெறும் தொடர்பாடல்களை NAPPP தற்போது கவனித்து வருகிறது. | |
| பயிர் அழிவுகளுக்கான கொடுப்பனவு | உற்பத்தியில் வீழ்ச்சி, உரம், கிருமிநாசினி பயன்பாடு போன்ற விவசாய பிரயோகங்கள் காணப்படாமை காரணமாக அண்மைக் காலமாக சிறிய விவசாயிகளுக்கு கடினமான காலப்பகுதியினை கடந்து செல்ல வேண்டி ஏற்பட்டது. இதனால் , 2 ஹெக்ரேயர் அல்லது அதற்குக் குறைந்தளவு நெற் பயிர் செய்கையில் ஈடுபட்ட ஏறக்குறைய 28,259 விவசாயிகள் 2022.05.31 ஆந் திகதிவரை அரசாங்க வங்கிகளில் பெற்ற பயிர் | **வெளிப்படையற்றது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. பல தடவைகள் தொடர்புகொண்ட போதும் நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. | **வெளியிடப்படவில்லை**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | அபிவிருத்தி நிதித் திணைக்களம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்கை கடன்களை செலுத்துவதற்கு முடியாதுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. அவர்களை இச்சுமையில் இருந்து விடுவிப்பதற்கு பொதுத்துறைசேரியின் காசுப் பாய்ச்சலில் அழுத்தத்தினை ஏற்படுத்தாத வகையில் இம் முன்மொழிவினை கட்டம் கட்டமாக செயற்படுத்துவதற்கு தேவையான நிதியாக ரூபா 350 மில்லியனை நான் ஒதுக்கீடு செய்கிறேன். | | | |
| | | **ஒத்துழைக்கப்பட்டது** | **மோசம்** | |

| | | | | |
|---|---|---|---|---|
| இளைஞர் விவசாய நிறுவனங்களை உருவாக்குதல் | விவசாயமும் தொழில்முனைவும் இணைந்திருப்பதை உறுதிசெய்ய வேண்டும். நாங்கள் பிரச்சனைகளைப் புரிந்துகொள்வதை உறுதிசெய்வதுடன் எங்கள் விவசாயத்தை ஊக்குவிக்க மறுபரிசீலனை செய்ய வேண்டும். இளைஞர்கள் புதிய தொழில்நுட்பங்களை வேகமாகக் கற்றுக்கொள்கின்றனர். அவர்கள் புதுமையான கருவிகளைப் பயன்படுத்துவதுடன் மதிப்புச் சங்கிலி முழுவதும் செயல்திறனை மேம்படுத்தலாம். இந்தச் சூழலில் இளைஞர் விவசாய நிறுவனங்களை உருவாக்கி அவற்றை 331 | தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மார்ச் 10, 2023 திகதியிடப்பட்ட பதில் கடிதம் நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் இருந்து கிடைக்கப்பெற்றது. எனவே இது தாமதமாகக் கிடைக்கப்பெற்ற பதில் என வகைப்படுத்தப்பட்டது. செயல்திட்டம் மற்றும் இலக்குகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் அறிக்கையிடுவதற்கு எந்த முன்னேற்றமும் இல்லை எனக் கருதப்படுகிறது. | நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் இருந்து கிடைக்கப்பெற்ற பதிலின் பிரகாரம், திட்டம் வகுக்கப்பட்டதுடன் அடுத்த 5 ஆண்டுகளுக்கான இலக்குகள் தீர்மானிக்கப்பட்டன. எனினும் இந்த முன்மொழிவை நடைமுறைப்படுத்துவதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என வழங்கப்பட்ட தகவல்கள் குறிப்பிடுகின்றன. | விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரதேச இளைஞர் கழகங்களின் கூட்டமைப்புடன் இணைத்து அதிகபட்ச நன்மைகளைப் பெறுவதற்கு நான் முன்மொழிகிறேன். இந்த முன்மொழிவுக்காக ரூ.250 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும். | | | |
| உள்நாட்டு பாற் பொருள் உற்பத்தியை ஊக்குவித்தல் | உள்நாட்டு பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு உறுதியான செயற்றிட்டம் ஒன்று அவசியமாகும். இதனால் சகல தரப்பினரின் ஒத்துழைப்புடனும் அரசாங்கம் அல்லது அபிவிருத்தி பங்காளர்களினால் நிதியளிக்கப்படும் கருத்திட்டம் ஒன்றின் மூலம் தேசிய மட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றினை செயற்படுத்துவது | **வெளிப்படையற்றது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. பல தடவைகள் தொடர்புகொண்ட போதும் நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. எனினும் பெப்ரவரி 13, 2023 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை கிடைக்கப்பெற்றதாக விவசாய அமைச்சு பதில் | **வெளியிடப்படவில்லை**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | விவசாய அமைச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவசியமாகும். மலைநாட்டு காலநிலை உற்பத்தித் திறன் கூடியது என்ற வகையில் பெருந்தோட்டங்களில் பயன்படுத்தப்படாத அல்லது குறைந்த உற்பத்தித்திறன் கொண்ட காணிகளை இக்கருத்திட்டத்திற்குப் பயன்படுத்த முடியும். இதற்காக ஆரம்பத்தில் ரூ.200 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகிறேன். | அனுப்பியிருந்தது. | | |
| விவசாயிகளுக்கு விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்களை வழங்குதல் | கடந்த காலங்களில் பயிர்செய்யப்பட்ட நிலங்களின் அளவு மற்றும் விளைச்சல் குறைவடைந்ததன் காரணமாக விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களின் | **வெளிப்படையற்றது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதே திணைக்களத்தின் வேறொரு தகவல் | **வெளியிடப்படவில்லை**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | விவசாயத் திணைக்களம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பற்றாக்குறை ஏற்பட்டதால், விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை வழங்குவதற்கு முடியுமான வகையில் விவசாயத் திணைக்களமும் அரச பண்ணைகளும் துரித நிகழச்சித்திட்டத்தை செயற்படுத்துதல் வேண்டும். இதனடிப்படையில் தேவையான விதைகளையும் நாற்றுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ரூ.400 மில்லியனை விவசாயத் திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகிறேன். | அலுவலரின் மேற்பார்வையின் கீழ் வருவதாகக் கூறி கோரிக்கையை நிராகரித்து பெப்ரவரி 14, 2023 திகதியிடப்பட்ட பதில் கடிதம் நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் இருந்து கிடைக்கப்பெற்றது. | | |
| | | **வெளிப்படையற்றது** | **வெளியிடப்படவில்லை** | |

| | | | | |
|---|---|---|---|---|
| அரசாங்க காணிகளை வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனுடன் பயன்படுத்த வேலையில்லா இளைஞர் யுவதிகளை ஈடுபடுத்துதல். | ஏற்றுமதி சார்ந்த விவசாயத்தை ஊக்குவிக்கும் உத்தியின் கீழ் விவசாயம் மற்றும் கால்நடைகளுக்கு அரச காணிகளைத் திறமையாகவும் உற்பத்தி ரீதியாகவும் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, வேலையற்ற இளைஞர்கள் இந்த நோக்கத்திற்காக வழிநடத்தப்படுவார்கள். அதன் பிரகாரம் தற்போது வேலையில்லாமல் உள்ள இளைஞர் குழுக்களுக்கு (10 உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள்) 20 ஏக்கர் காணி இந்த நோக்கத்திற்காக அடையாளம் காணப்பட்டுள்ள காணிகள் உள்ள பகுதியில் ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கப்படு | தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. முன்மொழிவு தங்களின் உடைமை, காவலில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் வரவில்லை எனக் குறிப்பிட்டு கோரிக்கையை நிராகரித்து பெப்ரவரி 22, 2023 திகதியிடப்பட்ட பதில் கடிதம் நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் இருந்து கிடைக்கப்பெற்றது. (குறிப்பு: தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகங்களின் அடிப்படையிலேயே ஆரம்ப தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது) | நடைமுறைப்படுத்தும் முகவரகம் குறித்த தெளிவின்மையால் எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை. முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு இணையத்தில் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. | தீர்மானிக்கப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிறது. இந்த முன்மொழிவை நடைமுறைப்படுத்த ரூ.50 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகிறேன். | | | |
| புதிய வியாபார முயற்சிகளுக்கு (Startups) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை (R&D) ஊக்குவித்தலும் வணிகப்படுத்தலும் | இலங்கையின் உலகளாவிய போட்டித் தரவரிசையை வெற்றிகரமாக மேம்படுத்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவது முக்கியம் ஆகும். உள்ளூர் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் உதவியுடன் குறிப்பாக ஸ்டார்ட்அப் கலாச்சாரத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் பொறிமுறையை உருவாக்கவும் அதை வணிகமயப்படுத் | **வெளிப்படையற்றது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. பல தடவைகள் தொடர்புகொண்ட போதும் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. எனினும் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை கிடைக்கப்பெற்றதாக பெப்ரவரி 22, 2023 திகதியிடப்பட்ட கடிதத்தை கல்வி அமைச்சு அனுப்பியிருந்தது. | **வெளியிடப்படவில்லை**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | கல்வி அமைச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| | தவும் ரூ.100 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகிறேன். | | | |
| உள்ளூர் பொதியிடல் தயாரிப்புகளை ஊக்குவித்தல் | சந்தைப்படுத்தல் மற்றும் சேமிப்பு நேரத்தை மேம்படுத்துவதன் மூலம் விவசாய உற்பத்திகளின் விரயத்தைக் குறைக்க வேண்டிய அவசியம் உள்ளது. ஆகவே உள்ளூர் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி விவசாய உற்பத்திகளைப் பாதுகாத்து சந்தைப்படுத்துவதற்கு உணவுப் பொதியிடும் தொழில்களை ஊக்குவிக்க வேண்டும். அதன் பிரகாரம் உணவுப் பொதியிடலுக்காக இறக்குமதி செய்யப்படும் புதிய தொழில்நுட்ப | **ஒத்துழைக்கப்பட்டது**<br>EDBயால் ஆன்லைனில் முன்கூட்டியே வெளியிடப்பட்ட சில தகவல்கள் – 2022 இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இல. 32 முன்மொழிவை (உள்ளூர் பொதியிடல் தயாரிப்புகளை ஊக்கப்படுத்துதல்) நடைமுறைப்படுத்துவதற்கான வழிகள் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் செப்டெம்பர் 28, 2022 அன்று சிரேஷ்ட மேலதிக செயலாளர் (பொருளாதார அலுவல்கள்) தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. நவம்பர் 18 – 20, 2022 வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற புரோஃபுட் (Profood), புரோபேக் (Propack) மற்றும் அக்-பிஸ் (Ag-Biz) 2022 கண்காட்சிகளில் | **மோசம்**<br>நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல் கோரிக்கைக்கான பதிலின் பிரகாரம், திருத்தப்பட்ட ஒதுக்கீடான ரூ.26.84 மில்லியனில் 5.7 மில்லியன் மட்டுமே ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்குக் கிடைக்கப்பெற்றது. அந்த நிதி பின்வரும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது: (1) புரோஃபுட் (Profood ) மற்றும் புரோபேக் (Propack) கண்காட்சியில் தேசிய பொதியிடல் விற்பனையகம் (2) பொதியிடல் தொடர்பான திட்டங்களுக்காக தேசிய ஒருங்கிணைப்பு அமைப்பாக தேசிய பொதியிடல் நிலையத்தை (NPC) மீண்டும் செயல்படுத்துதல். | ஏற்றுமதி அபிவிருத்திச் சபை |

| | | | | |
|---|---|---|---|---|
| | உபகரணம்/கருவிகளுக்கு 50 சதவீத இறக்குமதி வரிச்சலுகை வழங்கப்படுகிறது. இதைத் தவிர, பனை அபிவிருத்திச் சபை, தேசிய வடிவமைப்பு நிலையம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியன ஒன்றிணைந்து புதிய பொதியிடல் திட்டத்தை அறிமுகப்படுத்துவதுடன் புதுமையான பொதியிடல் மூலம் ஏற்றுமதிச் சந்தைக்குப் பங்களிக்க வேண்டும். இந்த முன்மொழிவை நடைமுறைப்படுத்த ரூ.250 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகிறேன். | தேசிய பொதியிடல் விற்பனையகம் பார்வையார்கள் பலரையும் கவர்ந்தது. பதினொரு அரச நிறுவனங்களுடன் இணைந்து கைத்தொழில் அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தேசிய பொதியிடல் நிலையத்தின் ஊடாக பொதியிடல் துறைக்கு கிடைக்கும் சேவைகளைக் காட்சிப்படுத்தின. பனை அபிவிருத்திச் சபை, தேசிய வடிவமைப்பு நிலையம், தேசிய அருங்கலைகள் பேரவை, இலங்கை கட்டளைகள் திணைக்களம், தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம், தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், மொரட்டுவை பல்கலைக்கழகம், இலங்கை நானோ தொழில்நுட்ப நிறுவனம், அறுவடைக்குப் பின்-தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியன இந்தக் கண்காட்சியில் இணைந்து | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொண்டன. பெறுமதி சேர்க்கப்பட்ட பொதியிடல் சேவைகளை வழங்குவதற்காக சிறு நடுத்தர தொழில்முனைவோருக்கு இவை கருத்தரங்குகளையும் நடத்தின.<br><br>தகவல் அறியும் கோரிக்கை பெப்ரவரி 1, 2023 அன்று தாக்கல் செய்யப்பட்டது. பெப்ரவரி 15, 2023 தியதியிடப்பட்ட பதில் கடிதம் நடைமுறைப்படுத்தப்படும் முகவரகத்தால் வழங்கப்பட்டது. மதிப்பீட்டின் முன்னேற்றத்தைக் கண்டறிய வழங்கப்பட்ட தகவல்கள் பொருத்தமானவையாகவும் பயனுள்ளதாகவும் இருந்தன. | | |
| சுற்றுலா மேம்பாடு தொடர்பான நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல் | இந்த ஆண்டு செப்டெம்பர் முதல் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக, சுற்றுலா சபை மற்றும் சுற்றுலாத் துறையுடன் | **ஒத்துழைக்கப்பட்டது** | **மோசம்** | சுற்றுலாத் துறை மற்றும் காணி அமைச்சு |
| | | தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. பெப்ரவரி | நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் இருந்து கிடைக்கப்பெற்ற பதிலின் பிரகாரம், அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையிலான விசேட திட்டத்தை உருவாக்க 5 உறுப்பினர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன), மேலும் அந்தக் குழு விசேட திட்டத்தை உருவாக்கியுள்ளது. எனினும் போதுமான நிதி இல்லாத | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்புடைய பிற நிறுவனங்களின் ஆதரவுடன் சுற்றுலாத் துறை அமைச்சு விசேட வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். எதிர்காலத்தில் இலங்கையில் நடைபெறவுள்ள பல்வேறு இனங்களுகே உரித்தான கலாச்சார/சமய நிகழ்வுகளை இலக்கு வைப்பது அவசியமாகும். இந்தத் துறையின் முக்கியத்துவத் தைக் கருத்தில் கொண்டு, 2023 இறுதிக்குள் ஆண்டொன்றுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 25 லட்சத்திற்கும் மேலாக அதிகரிக்கும் வகையில் இலக்கு நிர்ணயிக்க | 15, 2023 திகதியிடப்பட்ட கடிதம் நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் இருந்து கிடைக்கப்பெற்றது. வழங்கப்பட்ட தகவல்கள் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்குப் பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் இருந்தது. | காரணத்தால் அந்தத் திட்டம் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டும். மேலும் ஆடம்பரமாகச் செலவு செய்யக்கூடிய சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் சுற்றுலா பயணிகளை ஈர்க்கக்கூடிய புதிய இடங்களை அடையாளம் காண்பது, அவை தொடர்பான வசதிகளை மேம்படுத்துவது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 5 உறுப்பினர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட வேண்டும். அவர்களது பரிந்துரைகளைக் கொண்ட அறிக்கை அடுத்த | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஒரு மாதத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த ரூ.300 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகிறேன். | | | |
| முன்அனுபவம் இல்லாத தொழிலாளர்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனங்களில் இருந்து பயிற்சி மற்றும் தகுதியை வழங்குதல் | இலங்கையின் தொழிற்சந்தையில் எந்தவித முன் பயிற்சியும் இன்றி வேலையில் இணைந்து வேலை மூலம் திறன்களைப் பெற்று வேலையில் ஈடுபடுபவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். இந்த குழுவிற்குப் பொருத்தமான கல்வி அறிவு உட்பட கூடுதல் பயிற்சி மற்றும் | **வெளிப்படையற்றது**<br><br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. கோரிக்கை பெப்ரவரி 22, 2023 அன்று இராஜாங்க அமைச்சிடம் மாற்றப்பட்டது. அதன் பின்னர் எந்தப் பதிலும் | **வெளியிடப்படவில்லை**<br><br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான தகவல் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| | தகுதிகளை வழங்க வேண்டிய அவசியம் உள்ளது. இதன் மூலம் வேலையின் உற்பத்தித்திற னை அதிகரிக்கலாம். மேலும் திறனுள்ள தொழிலாளர்கள் மூலம் உலகளவில் வணிக நிறுவனங்கள் போட்டி நிலையைப் பெற முடியும். அத்துடன் வேலை தேடுபவர்கள் திறனுள்ள வேலை வாய்ப்புக்களையு ம் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளையும் கண்டறிய முடியும். கோவிட் – 19 பெருந்தொற்று மற்றும் பொருளாதாரப் பின்னடைவு ஆகியவற்றின் காரணமாக வேலைகளை இழக்கும் மக்கள் உள்ளனர். எனவே அவர்களை புதிய | கிடைக்கவில்லை. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேலை வாய்ப்புகளுக்காகப் பயிற்சியளிக்க வேண்டிய தேவை உள்ளது. கிராமப் புறங்களில் இருந்து சுதந்திர வர்த்தக வலய தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஆதரவு நிலை ஊழியர்கள் சுமார் 5 வருடங்கள் பணிபுரிந்த பின்னர் கிராமங்களுக்குத் திரும்புகின்றனர். இங்கே பெண்கள் அதிகம் தொழில் வாய்ப்புகளை இழப்பதுடன் ஆண்கள் முறைசாரா தொழில்களில் ஈடுபடுகின்றனர். அதன் பிரகாரம், சுதந்திர வர்த்தக வலயங்களில் பணிபுரிந்த வேலைகளின் மூலம் பெற்றுக்கொண்ட திறன்களின் அடிப்படையில் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | புதிய வேலையைப் பெற்றுக்கொள்ள கூடுதல் பயிற்சிகளை வழங்குவது அவசியம் ஆகும். இதன் பிரகாரம், தெரிவுசெய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்கள் (யூத் கார்ப்ஸ், VTA, NAITA), தொழிற்பயிற்சித் துறையின் ஒழுங்குபடுத்தும் அமைப்பான TVEC ஆகியவற்றிலிருந்து பயிற்றுவிப்பதற்கும் NVQ சான்றிதழ்களை வழங்குவதற்கும் இதன் கீழ் சாத்தியமாகும். இந்த முன்மொழிவை நடைமுறைப்படுத்த ரூ.200 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகிறேன். | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| விநியோகச் சங்கிலியை மேலும் திறனுடையதாக்குவதற்கு காய்கறி மற்றும் பழங்களை விநியோகிக்க புகையிரத சேவைகளைப் பயன்படுத்துதல் | காய்கறிகள், பழங்கள், பூக்கள் மற்றும் தேயிலை உற்பத்திகளை மலை நாட்டிலிருந்து கொழும்பு மற்றும் நகர்புறங்களுக்கு அவை கெட்டுப்போவதற்கு முன்பாகக் கொண்டுசெல்வது விவசாயி, உற்பத்தியாளர், வர்த்தக சமூகம் மற்றும் நுகர்வோர் ஆகியோருக்கு முக்கியமானதாகும். ஆகவே இவ்வாறான பொருட்களின் போக்குவரத்திற்கு புகையிரதத்தைப் பயன்படுத்த ஊக்குவிப்பது அவசியமாகும். இதன் மூலம் விரயம், தாமதங்கள் மற்றும் செலவுகள் குறைக்கப்படுவதுடன் இலங்கைப் புகையிரத திணைக்களத்திற்கு கூடுதல் | **வெளிப்படையற்றது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. பல தடவைகள் தொடர்புகொண்ட போதும் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. | **வெளியிடப்படவில்லை**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | புகையிரத சேவைகள் திணைக்களம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருமானம் கிடைக்கும். இதற்குத் தொடக்கமாக, ஹாலிஎல புகையிரத நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு காய்கறிகள், பழங்கள் மற்றும் பிற உற்பத்திகளை கொண்டுவருவதற்கு பொருத்தமான வசதிகளுடன் கூடிய புகையிரதம் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். இந்த நோக்கத்திற்காக சம்பந்தப்பட்ட புகையிரத நிலையங்களில் சரக்குகளை இறக்கி ஏற்றுவதற்கான வசதிகள் மேம்படுத்த வேண்டும். கூட்டுறவு மற்றும் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தனியார் தொழில்முனை வோர் பங்களிப்புடன் சரக்கு சேகரிப்பு நிலையங்களை உருவாக்குவதுடன் அந்த நிலையங்களில் இருந்து சம்பந்தப்பட்ட புகையிரத நிலையங்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதற்கான முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். கொழும்பிலிருந்து பதுளைக்கு சரக்குகளை கொண்டுசெல்ல மொத்த விற்பனையாளர்களை ஊக்குவிக்கும் பொருத்தமான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை புகையிரதத் திணைக்களம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயலாற்ற வேண்டும். இந்த முன்மொழிவை நடைமுறைப்படுத்த ரூ.200 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகிறேன். | | | |
| மாதாந்த சமுர்த்தி கொடுப்பனவு | மாதாந்த சமுர்த்தி கொடுப்பனவு தற்போதைய உதவித்தொகை - மாதாந்தக் கொடுப்பனவு ரூ. 420/- முதல் ரூ. 4,500/- அடுத்த 4 மாதங்களுக்கு முன்மொழியப்பட்டுள்ள உதவித்தொகை - மாதாந்தம் குறைந்தபட்சம் ரூ. 3,000/- முதல் அதிகபட்சமாக ரூ. 3,100/- | **வெளிப்படையற்றது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. கோரிக்கை மாற்றப்பட்டதுடன் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. | **வெளியிடப்படவில்லை**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான தகவல் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் |
| முதியோர்களுக்கான கொடுப்பனவு | முதியோர்களுக்கான கொடுப்பனவு தற்போதைய உதவித்தொகை - 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக் | **வெளிப்படையற்றது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட | **வெளியிடப்படவில்லை**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான தகவல் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்ப |

| | | | | |
|---|---|---|---|---|
| | கு மாதாந்த உதவித்தொகை ரூ. 2,000/- மற்றும் 100 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ரூ. 5,000/-<br>அடுத்த 4 மாதங்களுக்கு முன்மொழியப்பட்டுள்ள உதவித்தொகை - 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மாதாந்த உதவித்தொகை ரூ. 3,000/- மற்றும் 100 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ரூ. 2,500/- | நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. கோரிக்கை மாற்றப்பட்டதுடன் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. | | டுத்துகை அமைச்சு |
| சிறுநீரக நோயாளிகளுக்கு உதவித்தொகை | சிறுநீரக நோயாளிகளுக்கு உதவித்தொகை தற்போதைய உதவித்தொகை - ரூ. 5,000/-<br>அடுத்த 4 மாதங்களுக்கு முன்மொழியப்பட்டுள்ள உதவித்தொகை - மாதக் கொடுப்பனவு ரூ. 2,500/- | **வெளிப்படையற்றது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. கோரிக்கை மாற்றப்பட்டதுடன் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. | **வெளியிடப்படவில்லை**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான தகவல் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் (சமுர்த்தி, முதியோர், உடல் ஊனமுற்றோர் அல்லது சிறுநீரக உதவிக் கொடுப்பனவுகளைத் தற்போது பெறாதவர்கள் ஆனால் காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்கள்) | பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் (சமுர்த்தி, முதியோர், உடல் ஊனமுற்றோர் அல்லது சிறுநீரக உதவிக் கொடுப்பனவுகளைத் தற்போது பெறாதவர்கள் ஆனால் காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்கள்) தற்போதைய உதவித்தொகை - ரூ. 5,000/- மே, ஜூன் மற்றும் ஜூலை ஆகிய மாதங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது அடுத்த 4 மாதங்களுக்கு முன்மொழியப்பட்டுள்ள உதவித்தொகை - மேலும் நான்கு மாதங்களுக்கு ரூ. 5,000/- கொடுப்பனவு | **வெளிப்படையற்றது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. கோரிக்கை மாற்றப்பட்டதுடன் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. | **வெளியிடப்படவில்லை**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான தகவல் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவுப் பொதி | கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவுப் பொதி<br>தற்போதைய உதவித்தொகை - ரூ. 20,000/- உதவித்தொகை வழங்கப்படுகிறது<br>அடுத்த 4 மாதங்களுக்கு முன்மொழியப்பட்டுள்ள உதவித்தொகை - மாதக் கொடுப்பனவு ரூ. 2,500/- | **வெளிப்படையற்றது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. கோரிக்கை மாற்றப்பட்டதுடன் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. | **வெளியிடப்படவில்லை**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு போதுமான தகவல் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு |
| உடனடி நிவாரணத்துக்காக அடையாளம் காணப்பட்ட குடும்பங்கள் | உடனடி நிவாரணத்துக்காக அடையாளம் காணப்பட்ட குடும்பங்கள்<br>அடுத்த 4 மாதங்களுக்கு முன்மொழியப்பட்டுள்ள உதவித்தொகை - மாதக் கொடுப்பனவு ரூ. 10,000/- | **ஒத்துழைக்கப்பட்டது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. கோரிக்கை ஜனாதிபதி செயலகத்திடம் மாற்றப்பட்டது. எனினும் முன்னேற்றத்தை | **பகுதியளவு**<br>நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல் கோரிக்கைக்கான பதிலில், பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் 58.6% நிறைவடைந்துள்ளது. | ஜனாதிபதி செயலகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மதிப்பிடுவதற்குப் பொருத்தமான தகவல்களை முதலில் கோரிய முகவரகம் இதுவரை வழங்கவில்லை. | | |
| அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் மறுசீரமைப்பு அலகு | அரசுக்குச் சொந்தமான நிறுனங்களை மறுசீரமைப்பதற்காக "அரசுக்குச் சொந்தமான நிறுவன மறுசீரமைப்பு அலகை" உருவாக்க முன்மொழியப்பட்டுள்ளது. இந்த முன்மொழிவை நடைமுறைப்படுத்த ரூ.200 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகிறேன். | **ஒத்துழைக்கப்படாதது**<br><br>மட்டுப்படுத்தப்பட்ட தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்பட்டன. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. திணைக்களத்திற்குப் பொறுப்பான அமைச்சிடம் கோரிக்கை மாற்றப்பட்டது. மின்னஞ்சல் மூலம் மார்ச் 24, 2023 பதில் கிடைக்கப்பெற்றது. | **குறிப்பிடத்தக்க அளவு**<br><br>அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான மறுசீரமைப்பு அலகின் தலைவராக நியமிக்கப்பட்ட சுரேஷ் ஷாவிடம் இருந்து மின்னஞ்சல் மூலம் கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் முன்மொழிவின் முன்னேற்றம் பின்வருமாறு:<br><br>1. வரைபு SOE கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது உலக வங்கியின் உதவியுடன் அது இறுதிசெய்யப்பட்டு வருகிறது. ஏப்ரல் புது வருடத்திற்கு முன்னதாக இது அமைச்சரவை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும்.<br>2. SOE மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கும், SOE முன்னோக்கி கொண்டுசெல்வதற்கும் ஹோல்டிங் நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. செயல்முறை விதிகள் தயாரானதும் இந்த நிறுவனம் உருவாக்கப்படும். உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் விதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.<br>3. 8 நிறுவனங்களை விலக்குவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. நாங்கள் பின்பற்ற விரும்பும் செயல்முறை உட்பட அதன் விபரங்கள் பொது வெளியில் உள்ளன.<br>4. எங்களுடைய செலவினங்கள் குறைவாக உள்ளன. நான் உட்பட குழுவின் உறுப்பினர்கள் கொடுப்பனவின்றி பணியாற்றிவருகிறோம். சம்பளங்களைப் பெறும் ஊழியர்களைப் பொறுத்தவரை தற்போது 6 பேர் உள்ளனர். எங்களுடைய அலுவலகம் அரசுக்குச் சொந்தமான அலரி மாளிகையில் அமைந்துள்ளது.<br><br>வழங்கப்பட்ட தகவல்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் நிதி தொடர்பான முன்னேற்றம் குறித்து வெளிப்படுத்தப்படவில்லை. எனினும் SOE மறுசீரமைப்பு அலகின் | நிதி அமைச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உருவாக்கத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்குப் போதுமானதாக இருந்தது. | |
| உள்நாட்டு விவசாய அபிவிருத்தி (DAD - Domestic Agriculture Development) மதிப்புச் சங்கிலி கருத்திட்டத்தை வலுப்படுத்துதல் | விவசாய மதிப்புச் சங்கிலிகளை உருவாக்குவதும் அவசியமாகும். இந்த நோக்கத்திற்காக உள்நாட்டு விவசாய அபிவிருத்தி மதிப்புச் சங்கிலி திட்டத்தை வலுப்படுத்த நான் முன்மொழிகிறேன். இதற்கான முன்னோடித் திட்டம் இலங்கை மத்திய வங்கியால் அதன் சொந்தி நிதியில் (ரூ,1 பில்லியன்) செயல்படுத்தப்பட்டு வருகிறது. வெளிநாட்டுச் சந்தையில் உற்பத்தியை ஊக்குவிக்கும் அதேவேளை அபிவிருத்தி பங்காளர்களின் உதவியுடன் இந்தத் திட்டத்தை | **வெளிப்படையற்றது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. கோரிக்கை பெப்ரவரி 10, 2023 அன்று விவசாயத் திணைக்களத்திடம் மாற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. | **வெளியிடப்படவில்லை**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | விவசாய அமைச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2023ம் ஆண்டில் விரிவாக்க எதிர்பார்க்கப்படுகிறது. | | | |
| காலநிலை நிதியத்துடன் இணைந்து காலநிலை தாக்கங்களைக் குறைக்கும் திட்டம் | இலங்கையில் வானிலை மற்றும் காலநிலை தொடர்பான தாக்கங்களினால் விபத்துக்கள், பேரிடர்கள் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படும் போக்கு அதிகரித்து வருவதால் காலநிலை தாக்கங்களைக் குறைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்காக சுற்றாடல் விடயங்களைக் கையாளும் அமைச்சு பொருத்தமான திட்டத்தைத் தயாரிப்பதுடன் காலநிலை | **ஒத்துழைக்கப்பட்டது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மார்ச் 03, 2023 அன்று பதில் கிடைத்தது. வழங்கப்பட்ட தகவல் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்குப் பொருத்தமானதாக இருந்தது. | **மோசம்**<br>நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் இருந்து கிடைக்கப்பெற்ற பதிலின் பிரகாரம், திட்டம் வகுக்கப்பட்டதுடன் இலக்குகள் தீர்மானிக்கப்பட்டன. எனினும் இந்த முன்மொழிவை நடைமுறைப்படுத்துவதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என வழங்கப்பட்ட தகவல்கள் குறிப்பிடுகின்றன. | சுற்றாடல் அமைச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதியத்திடம் இருந்து தேவையான உதவியைப் பெற்று காலநிலை தாக்கங்களைக் குறைக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். | | | |
| STEM பாடங்களுக்கு பல்கலைக்கழகங்களின் கிளைகளை உருவாக்குதல் | உலகிலுள்ள பல நாடுகள் தங்கள் வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்பும் நோக்கில் வெளிநாட்டு மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகளை வழங்குகின்றன. தெற்காசிய பிராந்தியத்தில் பங்களாதேஷ், இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் வெளிநாட்டு ஒதுக்குகளை அதிகரிக்கும் வகையில் வெளிநாட்டு மாணவர்களை அனுமதிக்கின்ற | **வெளிப்படையற்றது** | **வெளியிடப்படவில்லை** | கல்வி அமைச்சு/பாதுகாப்பு அமைச்சு/ |
| | | தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. | முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ன. அதன்பிரகாரம், இலங்கையும் வெளிநாட்டு மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகளை வழங்குவதற்காக தனியார் முதலீட்டை ஊக்குவிக்க வேண்டும். குறிப்பாக விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM ) ஆகிய பாடங்களுடன் நிதியியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மருத்துவம் ஆகியவற்றில் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு நான் முன்மொழிகிறேன். இந்த நோக்கத்திற்காக நிறுவனங்கள் சட்டம் மற்றும் பல்கலைக்கழகங்கள் சட்டம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்ட விதிகளின் படி, தேவைப்படும் போது அவற்றைத் திருத்துவதற்கு உட்பட்டு, அவ்வாறான பல்கலைக்கழகங்களின் கிளைகளை உருவாக்க முதலீட்டுச் சபை மூலம் அரசாங்கம் அனைத்து வசதிகளையும் வழங்கும். உயர் கல்வியில் தனியார் முதலீட்டைக் கொண்டுவருவதன் மூலம் அரசாங்கத்தின் வளங்களை இலவசக் கல்விக்காகப் பயன்படுத்த முடியும் என்பதுடன் உண்மையில் தற்போதுள்ள நிலையை விட இன்னும் விரிவாக்க | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | முடியும். இவ்வாறான பல்கலைக்கழங்களில் இலங்கை மாணவர்கள் கல்வி கற்பதற்கு புலமைப்பரிசில்களையும் வழங்க முடியும். கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கிளை வளாகத்தை குருநாகலில் திறப்பதற்கும் நான் முன்மொழிகிறேன். | | | |
| அரசாங்க தொழிற்பயிற்சி நிலையங்களில் சமூக அலகுகளை உருவாக்குதல் | நகர் மற்றும் கிராமப்புற சமூகத்தில் வாழும் பலர் சிறு அளவிலான சுயதொழில் அல்லது வாழ்வாதாரத் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தச் சமூகத்திற்கு வாழ்க்கைத் தொழில்களுக்கான | **வெளிப்படையற்றது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. | **வெளியிடப்படவில்லை**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | கல்வி அமைச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளில் பகுதி நேர அல்லது குறுகிய கால தொழிற்பயிற்சியை அளிப்பதன் மூலம் அந்த வேலைகளில் உற்பத்தித்திறன், பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை அதிகரிக்கலாம். மேலும் உற்பத்திகளின் தரமும் அதிகரிக்கும். இந்த நோக்கத்திற்காக அரசாங்கத்தின் கீழ் செயற்பட்டுவரும் ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்திலும் சமூகத்தை வலுவூட்டும் பொருட்டு சமூக அலகு ஒன்றை உருவாக்க முன்மொழியப்பட்டுள்ளது. தொழிற்பயிற்சி | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலையத்தில் இல்லாத தொழில்நுட்பச் சேவைகள் வெளியிடங்களில் இருந்து பெறப்படுவதுடன் தொழிற்பயிற்சி வசதிகள் வழங்கப்படும். அதன் பிரகாரம் ஆன்லைனில் சுயதொழில் உணவு மற்றும் பானம் தயாரிப்பு, மீன் உலர்த்துதல் மற்றும் காய்கறிகளை உலர்த்துதல், தையல், நெசவு, பித்தளை மற்றும் இரும்புத் தொழில் ஆகிய வாழ்வாதாரத் தொழில்களுக்கான பயிற்சிகளை வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. பயிற்சிக்குப் பின்னர் சான்றிதழும் வழங்கப்படும். முறையான | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயிற்சிக்குப் பின்னர் தற்போது ஈடுபட்டுவரும் தொழிலை திறமையாகச் செய்யமுடியும். எனவே உணவு மற்றும் பிற தயாரிப்புகளை தரத்துடன் வழங்க முடியும். அதன் மூலம் அவர்களுடைய பணிப் பாதுகாப்பை உறுதிசெய்வதுடன் அவர்களது தொழில்களை மேம்படுத்த முடியும். இந்த முன்மொழிவை நடைமுறைப்படுத்த ரூ.200 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகிறேன். | | | |
| புகையிரத சேவையின் தரம் மற்றும் செயல்திறனை மேம்படுத்த தனியார் முதலீடு | பொதுமக்களுக்கு பயனுள்ள உயர் தர போக்குவரத்துச் சேவையை வழங்குவதே அரசாங்கத்தின் | **வெளிப்படையற்றது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட | **வெளியிடப்படவில்லை**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | புகையிரத சேவைகள் திணைக்களம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | முக்கியக் கடமையாக இருப்பதால், இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்கனவேயுள்ள உட்கட்மைப்பைப் பயன்படுத்தி புகையிரதப் போக்குவரத்து சேவையை அபிவிருத்தி செய்ய தனியார் துறை முதலீடுகள் பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிரகாரம், களனிவெளி புதையிரத சேவையை முன்னோடித் திட்டமாக அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. போட்டித்தன்மையான ஏலத்தின் அடிப்படையில் முதலீட்டாளர்/கள் தெரிவுசெய்யப்படுவார்கள். | நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. | | |

| வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பெயர் | வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் சுருக்கம் | வெளிப்படைத்தன்மையின் வகை | முன்னேற்றத்தின் வகை | அரச நிறுவனம் |
|---|---|---|---|---|
| நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கும் ஊழலை எதிர்ப்பதற்கும் விரிவான கட்டமைப்பு | நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கும் ஊழலை எதிர்ப்பதற்கும் விரிவான கட்டமைப்பு உருவாக்கப்படும் | **மட்டுப்படுத்தப்பட்டது**<br>மட்டுப்படுத்தப்பட்ட தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்பட்டன. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. | **நடைமுறைப்படுத்தப்படவில்லை**<br>முன்கூட்டியே வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரம், இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சுயாதீன விசாரணை ஆணைக்குழுவை உருவாக்குவது உள்ளிட்ட ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. | சட்டமா அதிபர் திணைக்களம் |
| சொத்துக்களை வெளிப்படுத்தும் முறையை வலுப்படுத்துதல் | இந்தக் கட்டமைப்பு சொத்துக்களை வெளிப்படுத்தும் முறையை வலுப்படுத்துவதுடன் இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை ஆணைக்குழு விசாரிப்பதற்கான சுதந்திரத்தை அதிகரிக்கும். | **வெளிப்படையற்றது**<br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. | **வெளியிடப்படவில்லை**<br>முன்மொழிவின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை அல்லது இணையத்தில் கிடைக்கவில்லை. | சட்டமா அதிபர் திணைக்களம் |

| | | | | |
|---|---|---|---|---|
| இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் சுதந்திரத்தை அதிகரித்தல் | மேலும் ஊழலைத் தடுப்பதற்கும் வெளிப்படைத்தன்மையை உருவாக்குவதற்கும் தொழில்நுட்பத்துடன் கூடிய கட்டமைப்பை ஊக்குவிக்க நான் முன்மொழிகிறேன். | மட்டுப்படுத்தப்பட்டது<br><br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. | **நடைமுறைப்படுத்தப்படவில்லை**<br><br>முன்கூட்டியே வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரம், இந்த முன்மொழிவானது முன்மொழியப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் மூலம் நிறைவேற்றப்படவுள்ளது. | சட்டமா அதிபர் திணைக்களம் |
| ஊழலைத் தடுப்பதற்கு தொழில்நுட்பத்துடன் கூடிய கட்டமைப்பை ஊக்குவித்தல் | மேலும் ஊழலைத் தடுப்பதற்கும் வெளிப்படைத்தன்மையை உருவாக்குவதற்கும் தொழில்நுட்பத்துடன் கூடிய கட்டமைப்பை ஊக்குவிக்க நான் முன்மொழிகிறேன். | ஒத்துழைக்கப்படாதது<br><br>தகவல்கள் ஆன்லைனில் முன்கூட்டியே வெளிப்படுத்தப்படவில்லை. NDB ஆல் அடையாளம் காணப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் பெப்ரவரி 1, 2023 தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மார்ச் 03, 2023 அன்று பதில் கிடைத்தது. | **வெளியிடப்படவில்லை**<br><br>நடைமுறைப்படுத்தும் முகவரகத்திடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், திட்டமிடப்பட்ட கருத்திட்ட நடவடிக்கைகளுக்கான செயல்திட்டம் "சொத்துக்களை வெளிப்படுத்தும் மையப்படுத்தப்பட்ட இலத்திரனியல் முறையை அறிமுகப்படுத்துதல் மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழுவின் விசாரணைக் கோப்புகளின் நகர்வு பற்றிய கணனிமயமாக்கப்பட்ட தரவுதளத்தை நிறுவுதல்" என்ற தலைப்பில் உள்ள அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளது. எனினும் முன்மொழிவின் உண்மையான நடைமுறைப்படுத்தும் நிலை தொடர்பான எந்தவொரு தகவலும் இந்தப் பதிலில் வழங்கப்படவில்லை. எனவே மதிப்பீடு முன்னெடுக்கப்படவில்லை. | இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு/ தொழில்நுட்ப அமைச்சு |

| | | வெளிப்படையானது | நடைமுறைப்படுத்தப்பட்டது | |
|---|---|---|---|---|
| திட்ட அலுவலங்கள் மற்றும் திட்ட அலகுகளின் நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்ய குழு | பல்வேறு நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட திட்ட அலுவலகங்கள் மற்றும் திட்ட அலகுகளின் நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்வது அவசியமாகும். ஏனெனில் இவற்றுக்காக குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அலுவலர்கள் மற்றும் அதிகளவு பணம் செலவிடப்படுகிறது. எனவே அவ்வாறான அலுவலகங்கள் மற்றும் அலகுகளின் திட்டமிடப்பட்ட நோக்கங்கள் பூர்த்திசெய்யப்படுகின்றனவா என்பதை மதிப்பாய்வு செய்ய குழு | அமைச்சரவைத் தீர்மானம் மூலம் தகவல் முன்னதாகவே வெளிப்படுத்தப்பட்டது | முன்கூட்டியே வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரம்:<br><br>அரசாங்கத்தின் பல்வேறு கருத்திட்டங்கள் மற்றும் B11 வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது எளிதாக்குவதற்கு திட்ட அலுவலகங்கள் மற்றும் திட்ட முகாமைத்துவ அலகுகளை மீளாய்வு செய்வதற்கான குழு நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு 06-09-2022 அன்று அறிவித்தது. இந்தக் குழுவுக்கு கே.ரி.கமல் பத்மசிறி தலைவராக உள்ளதுடன் என்.கே.ஜி.கே. நெம்மாவத்த மற்றும் ஆர்.எச்.ருவினிஷ் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். குழுவின் பரிந்துரைகளைக் கொண்ட அறிக்கை 15-11-2022க்கு முன்னதாக சமர்ப்பிக்கப்படும்.<br>முன்மொழியப்பட்டுள்ள குழுவின் நியமனத்தைத் தொடர்ந்து, அதன் செயற்பாடுகள் மேலும் விரிவாக்கப்பட்டன. குழுவானது பின்வரும் பணிகளை ஆராயும்: 1) திட்ட அலுவலங்கள்/திட்ட முகாமைத்துவ அலகுகள் மூலம் முன்னெடுக்கப்படும் பணிகளை அந்தந்த அமைச்சு/திணைக்களம்/நிறுவனத்தினாலேயே முன்னெடுக்க முடியுமா என ஆராய்தல் 2) திட்ட அலுவலகங்கள்/திட்ட முகாமைத்துவ அலகுகளுக்கு ஒதுக்கப்பட்ட பணிகள் நிறைவடைந்தனவா என ஆராய்தல் 3) திட்ட அலுவலங்கள்/திட்ட முகாமைத்துவ அலகுகளால் முன்னெடுக்கப்படும் பணிகளின் தன்மை காரணமாக அவை தொடர வேண்டுமா என்பதை ஆராய்தல் 4) திட்ட அலுவலகங்கள்/திட்ட முகாமைத்துவ அலகுகளில் அளவுக்கதிகமான அலுவலர்கள் உள்ளனரா என்பதை ஆராய்தல் 5) வேறு ஏதேனும் தொடர்புடைய விடயங்கள் (ஏதேனும் இருந்தால்).<br><br>06-02-2023 அன்று எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், தற்போது செயற்பாட்டில் உள்ள 55 திட்ட முகாமைத்துவ அலகுகளை மூடுவதும், 32 திட்ட முகாமைத்துவ அலகுகளை இடைநிறுத்துவதும், 46 திட்ட முகாமைத்துவ அலகுகளை குறைந்த | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒன்றை நியமிக்க நான் முன்மொழிகிறேன். மேலும் இவ்வாறான அமைப்புகளைத் தொடர்வது அவசியமா என்பது குறித்த பரிந்துரைகளை 3 மாத காலத்திற்குள் அமைச்சரவை அமைச்சர்களிடம் சமர்ப்பிக்கவும் நான் முன்மொழிகிறேன். | | எண்ணிக்கையிலான அலுவலர்களுடன் இயக்குவதும் சரியானது எனக் குழு பரிந்துரைத்திருந்தது. அதன் பிரகாரம், குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் கௌரவ. ஜனாதிபதி அவர்களின் முன்மொழிவிற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. | |

*பொறுப்புத்துறத்தல்*

இந்த இணைய மேடையில் பிரசுரிக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் அரச ஆவணங்கள், உத்தியோகபூர்வ வெளியீடுகள், பொது ஆவணங்கள் மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. இந்த இணைய மேடையில் பிரசுரிக்கப்படும் தகவல்கள் எவையும் வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தினதோ அந்நிறுவனத்தில் பணிபுரிபவர்களினதோ தனிப்பட்ட நோக்கோ கருத்துக்களோ கிடையாது. இந்த இணையமேடையில் உள்ள தகவல்களின் காரணமாக ஏற்படும் எவ்வகையான இழப்புக்கள் மற்றும் சேதங்களிற்கோ அல்லது ஏற்படலாம் என அனுமானிக்கக்கூடிய எவ்வகையான இழப்பு, சேதம் அல்லது நற்பெயரிற்கான களங்கங்களிற்கோ வெரிட்டே ரிசர்ச் நிறுவனம் பொறுப்பெடுக்காது.

இந்த இணையமேடையில் பிரசுரிக்கப்படும் தரவுகள் அனைத்தையும் நம்பகமான மூலங்களில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டிருக்கும் அதேவேளை, அத்தரவுகளைக் கொண்டு பெற்ற பெறுபேறுகளில் காணப்படும் தவறுகள் அல்லது விடுபடல்களிற்கு வெரிட்டே ரிசர்ச் நிறுவனமோ budgetpromises.org குழு அங்கத்தவர்களோ பொறுப்பாக மாட்டார்கள். வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் அனுமதியின்றி இந்த இணையமேடையில் உள்ள உள்ளடக்கங்களை வணிக நோக்கத்திற்காக திருத்தவோ, வெளியிடவோ, கைமாற்றவோ, பரவலாக்கவோ, விற்பனை செய்யவோ, மீள்பதிக்கவோ, இதனைத் தழுவி புதிய உள்ளடக்கங்களை உருவாக்கவோ, பகிர்ந்தளிக்கவோ, மீள்இடுகையிடவோ அல்லது காட்சிப்படுத்தவோ எவரிற்கும் அனுமதியில்லை. அத்துடன் வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் முன் அனுமதியின்றியோ, முன் அனுமதியுடனோ இந்த இணையமேடையில் உள்ள தரவுகளைக் கொண்டு மீள்உருவாக்கப்படும் எவ்வகையான வெளியீடுகளிற்கும் budgetpromises.org குழு பொறுப்பெடுக்காது.

budgetpromises.org எவ்விதமான அரசியல் கட்சிகளை பிரதிநிதிப்படுத்துவதோ, ஆதரிப்பதோ, ஒப்புதல் வழங்குவதோ அல்லது எவ்விதமான அரசியற் கட்சிகளுடனோ அரசியலுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினுடனோ தொடர்புபட்டது அல்ல. அத்துடன் எமது பகுப்பாய்வுகள் அனைத்தும் புள்ளிவிபரங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட அனுமானங்கள் ஆகும்.

இந்த இணையமேடையில் உள்ள அனைத்து தரவுகளும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் எவ்வித கட்டணங்களும் இன்றி வழங்கப்படுகின்றது. இத்தரவுகளைப் பாவிப்பதற்கு பாவனையாளர் மற்றும் வெரிட்டே ரிசர்ச் அல்லது budgetpromises.org குழுவினரிற்கும் இடையில் எவ்வித ஒப்பந்தங்களோ, புரிந்துணர்வுகளோ கிடையாது.

இந்த இணையமேடை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளின் போக்கினை குறித்துக்காட்டுவதற்காக, budgetpromises.org இனால் சுயாதீனமாக தயாரிக்கப்பட்ட பல பகுப்பாய்வுகளையும்

உள்ளடக்கியுள்ளது. இப்பகுப்பாய்வுகளை மீள் உருவாக்கம் செய்யும் முன் வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் அனுமதியைப் பெறுவது கட்டாயமாகும்.